
## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 97

**யாத்திராகமத்தின் கதாபாத்திரங்கள் - விடுகதையில்**



Book - Post

பெறுநர் : திரு/ திருமதி

↓↓↓

3. கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமானவன். தலைமுறை தலைமுறைதோறும் எனக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் உண்டு. நான் யார்? (7)
6. எழுபது பேரோடு எகிப்துக்குச் சென்றவர்களுள் ஒருவன்; யாக்கோபுக்கு சில்பாள் மூலம் பிறந்த இளையவன். நான் யார்? (3)
7. இஸ்ரவேலின் முதல் ராஜா அல்ல; இமைபொழுதில் பார்வையிழந்து ஆண்டவரே நீர் யார் என வினவிய அப்போஸ்தலனுமல்ல. கானானிய ஸ்திரியின் மகனான நான் யார்? (3)
8. மோசேயின் கடைக்குட்டி தாத்தாவாகிய நான் யார்? (4)
11. அந்நிய அக்கினியை ஆண்டவரின் சந்நிதியில் கொணர்ந்து அகாலமாய் மாண்ட ஆரோனின் மூன்றெழுத்துப் புதல்வர்களுள் ஒருவன். (3)

→→→

1. நதியில் குளிக்க வந்தாளாம்; நாணற்பெட்டியைக் கண்டாளாம் திறந்து உள்ளே பார்த்தாளாம்; இரக்கம் கொண்டு குமாரனாய் ஏற்றாளாம்; மோசே என பெயரும் சூட்டினாளாம். அவள் யார்? (11) கடைசி இரு எழுத்துக்கள் ↓
2. மகிமையாய் வெற்றிச் சிறந்தவரை மகிமைப்படுத்த மக்களோடு நடனத்தோடு புறப்பட்டவள். (4)
4. பாலும் தேனும் ஓடும் கானானில் அடக்கம் பண்ணும்படி என் எலும்பும் பயணித்தது. நான் யார்? (4) கடைசி இரு எழுத்துக்கள்↓
8. ஊருடைய மகனான நான் யார்? (2)
12. கோராகின் வம்சத் தலைவர்களுள் ஒருவனான நான் யார்? (5) கடைசி எழுத்து ↑
17. ஆட்டு மந்தைக்குச் சொந்தக்காரன்; ஆசாரிய குலத்து வம்சக்காரன்; ஆலோசனையில் கெட்டிக்காரன்; நான் யார்? (4)

↑↑↑

9. நூற்று முப்பத்து மூன்று ஆண்டுகள் உயிரோடிருந்த லேவியின் மகன். (3)
10. மகேலியின் தந்தை. (3)
12. அம்மினதாப்பின் குமாரத்தியும் நகசோனின் சகோதரியுமாகிய நான் யார்? (5)

**தொடர்ச்சி 6-ம் பக்கம்**



SSA

# ஆரோனின் துளிர்த்த கோல்

**வேதம் அறிவோம், தேவர்களாவோம்**

THE SPROUTED STAFF OF AARON

மாத இதழ் : ஆகஸ்ட் 2020

## யாத்திராகமம் 20:6

**தேவன் : என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்.**

**Show me your ways, O Lord; teach me your paths.**

**- Psalm 25 : 4**

The Global Positioning System (GPS) is changing the way we work, travel, and play. Using the signals from multiple satellites, an inexpensive GPS receiver can compute your location anywhere in the world. But it helps only the person who believes the information and acts on it.

In a similar way, God's guidance through the Bible benefits us only when we trust His Word and obey it. "The humble He guides in justice", the psalmist wrote, "and the humble He teached His way. All the paths of the LORD are mercy and truth, to such as keep His covenant and His testimonies". (Psalm 25:9-10)

Remeber, guidance from above is promised to all who will accept God's word and follow His directions.

**அன்புடையீர், வணக்கம்.**

# மேலானது மேன்மையானது

தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்திற்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தாள் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்'தானியேல் 6:10

மேல்வீட்டறையின் அனுபவம் மேலானது மேன்மையானது. அந்நிய தேசத்திலும் ஆண்டவரின் சந்நிதானத்தில் அமர்ந்திருக்கும் அருமையான பழக்கத்தை அனுதினமும் அநுசரித்து வந்தார் தானியேல்.

ஏறக்குறைய 120 சீடர்கள் மேல்வீட்டறையில் ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்ததைப் பார்க்கிறோம். மேல் வீட்டில் கூடியிருந்தவர்கள் ஒவ்வொருவரும் வரத்திலும் வல்லமையிலும் வெவ்வேறாக இருந்தபோதிலும் ஒருமனதின் ஆவி அவர்களை ஆட்கொண்டிருந்ததை நாம் தெள்ளந்தெளிவாக உணரமுடிகிறது. விசுவாசிகள் ஒருமித்து வாசம் பண்ணுவது நன்மையும் இன்பமுமாயிருக்கிறது. இந்த ஆதி விசுவாசிகளைக் கொண்டே ஆண்டவர் இப்பூமியைக் கலக்கினார். பேதுருவின் நிழல் சுகத்தை கொடுத்தது. பிலிப்பு சென்று பிரசங்கித்த பட்டணத்தில் சுகமும் மகிழ்ச்சியும் கரை புரண்டு ஓடியது. மேல்வீட்டறையின் அனுபவம் மேலானது மேன்மையானது.

உணவு ஆயத்தமாக தாமதித்தபோது பேதுரு மேல்வீட்டறையை நோக்கிச் சென்றார். அதின் விளைவாக ஞானதிருஷ்டி அடைந்து பரம தரிசனத்தைப் பெற்றார். சர்வபூமிக்கும் தேவன் சுதேசிக்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணத்தை பழைய ஏற்பாட்டில் அமைத்து அதை புதிய ஏற்பாட்டில் உறுதிப்படுத்துவதை பேதுரு முதலில் உணர்ந்துக்கொண்டு உன்னதரின் ஒப்பற்ற தன்மையை அனைவரும் அறிந்துக்கொள்ளும்படி தேவன் பட்சபாதமுள்ளவரல்லவே என்று முழங்கினான். நற்செய்தி விசுவாசிகளுக்கு மட்டும் அல்ல. இதோ, எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோசத்தை உண்டாக்கின நற்செய்தியை அல்லவா அன்று காபிரியேல் வெளிப்படுத்தினார். தேவாதி தேவனின் பண்பில் பட்சபாதம் இல்லை. பேதுரு மேல்வீட்டறையில் இந்த பண்பை புரிந்துக்கொண்டவராய் கொர்நேலியுவின் வீட்டிற்கு கடந்து செல்கிறார். அங்கே ஆத்தும ஆதாயம் செய்ய ஆவியானவர் வழிநடத்துகிறார். மேல்வீட்டறையின் அனுபவம் மேலானது மேன்மையானது.

பழைய ஏற்பாட்டில் சுனேமியாள் எலிசா என்னும் தேவ மனிதனுக்கு மேல்வீட்டில் ஒரு அறை அமைத்து வசதிகளைச் செய்து கொடுத்தாள். சுனேமியாளும் அற்புதமாய் புத்திர பாக்கியத்தைப் பெற்றாள். அதிசயமாய் பெற்ற அந்த மகனும் ஒரு நாள் இறந்துப்போகவே, தூக்கிக்கொண்டு மேல்வீட்டு அறையை நோக்கி விரைந்தாள். அறையைப் பூட்டிவிட்டு தேவமனிதனை நோக்கிப் போனாள். எலிசா வந்து மேல்வீட்டறையில் அந்த உயிரற்ற சடலத்தை உயிர்ப்பித்தார். பேதுருவும் தொற்காளை உயிர்ப்பித்தது மேல்வீட்டறையிலே. மேல்வீட்டறையில் உயிரற்றவை உன்னதரால் உயிர்பெறும் அனுபவம் மேலானது மேன்மையானது.

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து இப்புவியில் வாழ்ந்தபோது, பஸ்காவைத் தம்முடைய சீடர்களுடன் ஆசரிக்க ஆவலாகயிருந்தார். அதற்கான ஆயத்தமும் ஆச்சரியமான நிகழ்வாகவே நடக்கிறது. அது ஒரு விஸ்தாரமான, அவசியங்களால் அலங்கரிக்கப்பட்ட மேல்வீட்டறை. அங்கே புதிய உடன்படிக்கை உறுதிப்படுத்தப்படுகிறது. எல்லா பலிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டாக இயேசு கிறிஸ்துவே தம்மைப் பஸ்கா பலியாக ஒப்புக்கொடுக்கப்போவதைக் குறிக்கும் பழைய ஏற்பாட்டின் கடைசி இராப்போஜனமும் புதிய ஏற்பாட்டின் நினைவுகூரும் இராப்போஜனமுமாக அமைந்த அந்த மேல்வீட்டறையின் அனுபவம் மேலானது மேன்மையானது.

தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டு கச்சைகளும் உருமால்களும் சுகத்தைக் கொடுக்கும் அளவுக்கு தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட பவுல் மேல்வீட்டறையில் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். அங்கு ஐத்திகு என்னும் வாலிபன் தூக்கத்தால் மூன்றாம் மெத்தையிலிருந்து விழுந்து மரித்தான். அவனை உயிர் பெற செய்தார் பவுல். இந்த மேல்வீட்டின் அனுபவமும் மேலானது மேன்மையானது.

ஆபத்தை அறிந்திருந்தும் தானியேல் தன் வீட்டுக்குப்போய் மேல்வீட்டறையில் ஏறினான் என்றால் அந்த அனுபவமும் மேலானது மேன்மையானதே. தேவனுக்கு செவி கொடுக்கிறவன் எவனோ அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான். ஆபத்துக்காலத்தில் மட்டும் ஆண்டவரை அழைப்பதல்ல அனுதினமும் அவரோடு மேல்வீட்டறையில் தரித்திருக்கிற அனுபவம் நமக்கு வேண்டும். இதற்கு மாடிவீடு வேண்டும் என்பது அர்த்தம் அல்ல. உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்திற்குரிய காரியங்களை அப்புறப்படுத்தி உன்னதரின் சமுகத்தில் பரிபூரண ஆனந்தத்தையும் பேரின்பத்தையும் அனுபவிப்பதே ஆகும்.

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



**<u>கடந்த மாத வேதவினா குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.</u>**

**I. 1. பிரியா ஜெனிட்டா, 2. சோபனா பிரேம், 3. லியோனா பர்னபாஸ், 4. ஹெப்சி பானுமதி**

**I & II. 1. P.D. கமலம்**

**I & III. 1.J. கெத்சி செல்வாபாய், 2. ஜெயசீலி ஜெயராஜ், 3. J. சோபியா பிரேமி**

**II & III. 1. A.V. வர்ஜீனியா, 2. கிறிஸ்தியாள், 3. பத்மாவதி ஞானப்பிரகாசம், 4. ரூத் வயலட் வசந்தா, 5. ஃபான்சி, 6. மத்தேயு மார்க், 7. பெபெல் ஜீவகி தாமஸ், 8. தனம் பேன்ஸி, 9. வசந்தா செல்வராஜ், 10. அன்னமேரி ராஜ், 11. G.T. ஜூலி, 12. ஜாய்ஸ் மணிமொழி, 13. சாந்தி குணா, 14. J. ஏஞ்சலினா, 15. V. கலாவதி, 16. காந்தா மனோகரன், 17. ரோப்பா கிறிஸ்டல், 18. ஜேனட் அருண், 19. வைல்ட் சாமிக்கண், 20. T. சுகந்தா, 21. சுதந்திரதேவி, 22. எஸ்தர் ராபின்சன், 23. ஜாய்ஸ் சுசீலாதேவி, 24. S. தனபாக்கியம், 25. S. செல்வமணி, 26. சுகந்தி ஜோன்ஸ், 27. ஜெயசீலி ரவிச்சந்திரன், 28. ஜான் அரசி, 29. பிரேமா பெஞ்சமின், 30. எஸ்தர் ராஜேந்திரன், 31. சந்திரா சிம்சன், 32. Sis. குளோரி, 33. Sis. நகோமி, 34. Sis. ஜூலியட் சுபமங்களா, 35. Sis. லூசி ஞானாபாய், 36. Sis. சலோமி, 37. லிடியா காந்தன், 38. ஜாய், 39. சுபா வணக்கராஜ், 40. ஞானதீபம், 41. சாந்தி செல்லையா, 42. I. டெய்சி, 43. லிடியா மரகதம், 44. ஏஞ்சலின் சிந்தியா, 45. Dr. விஜயலலிதா**

**III. 1. சகுந்தலா தனராஜ், 2. ராணி வில்சன், 3. மாலா கிறிஸ்டி நெப்போலியன், 4. ஸ்டெபி பிரினஸ், 5. குணதிலகா யோனத்தான், 6. ஹேமலதா ஜெயசந்தர், 7. பியூலா காந்தி, 8. M. எலிசபெத் ராணி, 9. M. பத்மாவதி, 10. சித்ராபாபு, 11. ஏஞ்சலின் பியூலா, 12. ரூபி சகுந்தலா, 13. சின்னம்மாள் மேரி**

**I, II & III. 1. ரூபல்லா அற்புதராஜ், 2. ஜாய் ஜோசப், 3. ஜூலியா சார்லி, 4. பிரேமா வில்சன், 5. ரெஜினாமேரி மனோகரன், 6. மார்கிரேட் எலிசபெத், 7. ஒலிவியா லாங்டன், 8. ஜேனட் குணா, 9. ரீட்டா ரோசலிண்ட், 10. மல்லிகா எட்வின், 11. பிரேமலதா தியாகராஜன், 12. பாலின் மார்டீன், 13. மனோகரி பெஞ்சமின், 14. கிரேஸ் பிராங்கிளின், 15. விமலா ரோசபெல், 16. சந்திரா இம்மானுவேல், 17. ஜோசப் அதிசயம், 18. திலகவதி அதிசயம், 19. ஜெயசீலி ரவிச்சந்திரன், 20. கமலாபாய், 21. ரோஸ்லின் திலகவதி, 22. பாக்கியராணி, 23. M. எலிசெபத், 24. ஐவி. கலாவதி, 25. ராணி தனராஜ், 26. D. அன்புக்கமலம், 27. பீட்டர் தாமஸ், 28. நகோமி எடிசன், 29. ஹெலன் சேசுராஜ், 30. மீரா பாண்டியன், 31. ஜேனட், 32. H. ஸ்நேகா, 33. செலைன் ராணி டேவிட், 34. சலோமி எட்வின், 35. B. தேவகிருபா, 36. சாந்தி வில்லியம், 37. ஜெயசீலி பால்ராஜ், 38. ஷாலினி இம்மானுவேல், 39. J. மிராண்டா, 40. ராணி சாந்தகுமார், 41. மோனிகாள் காந்திநாத், 42. ஆனி கில்சன், 43. ஷீலா பாலக்குமார், 44. சூசன் சுமித்ரா, 45. நிர்மலா டேவிட், 46. பியூலா ஜேசுராஜன், 47. ஜேம்ஸ், 48. ஜாஸ்மின் உஷாராணி, 49. விமலா குழந்தைசாமி, 50. ருவல்யா அருள் பிரகாசம், 51. ஜூலியட் கிருபாகரன், 52. சாந்தி ஜோயல், 53. ஜூலா கிரேஸ், 54. பியூலா நவமணி, 55. ரூபி காட்பிரே டேவிட், 56. ஜீவா செல்வராணி, 57. சுகுணா எலிசபெத், 58. கிறிஸ்டினா பெஞ்சமின், 59. ஆலிஸ் ஜோஷியா**

பரிசு பெறுபவர்:

1. திருமதி. **ஜாய்ஸ் சுசீலாதேவி** தஞ்சை, 2. திருமதி. **பிரேமலதா தியாகராஜன்** பழனி

## II. வேதாகமப் புதிர் - 41

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | பீ | ப் | ன | டு | மா | டு | ஆ | ம் | த |
| ர | வி | ன் | தி | க | கா | க் | ல் | மு | நோ |
| ங் | உ | எ | ந் | க் | ர | தி | த் | சி | வி |
| க | மோ | க | மு | றி | த் | து | ப் | போ | டு |
| ள் | ச் | த் | த | னை | ன் | வே | டு | மூ | ல் |
| ச | தி | ன் | ற் | மு | க | மு | த் | தை | தி |
| ரை | ம் | யி | ப | க | ர | ளை | ப் | ன் | த் |
| கு | செ | லி | ல | லு | த் | ன | யு | ரே | ர |
| கா | ஸ் | ப | னை | பா | தை | பா | லு | ம் | ஓ |

**யாத்திராகமம் 29 – 32 அதிகாரங்கள்**

1. இவ்வேத பகுதியில் உள்ள 21 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 19 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் மோசே கர்த்தரோடு முகமுகமாய் பேசினவர்; அவரது விருப்பத்திற்கு கர்த்தர் அளித்த பதிலின் முதல் கூற்று வெளிப்படும்.

### II. வேதாகமப் புதிர் - 40 விடை

**கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? யாத்.32:26a**

### III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 97 8-ம் பக்க தொடர்ச்சி...

↑↑↑13. இஸ்ரவேலின் ஒரிஜினல் பெயர். (4) 17. சிமியோனின் முதற்பேரானவன். (4)

18. கருவறையில் கருணையின்றி கொலை செய்யக் கட்டளை; கர்த்தருக்கு பயந்து அவர் சித்தம் செய்த செவிலியர் பெற்றனரே நன்மைகள். இவர்களில் முதலாமவள் – நான் யார்? (5)

←←←

3. யாத்திராகமத்தின் கதாநாயகர்களைப் பெற்றவன் என்ற பெருமை எனக்குண்டு. நான் யார்? (4)
5. ஓடும் நதியின் ஓரத்தில் – ஓங்கி வளர்ந்த நாணலில் – ஒதுக்கி இருந்த பெட்டியில் – உள்ளே இருந்தான் சுட்டி. அவன் யார்? (2)
6. கோராகின் மூன்றெழுத்துக் கொண்ட வம்சத் தலைவன். (3)
14. ஈரெழுத்துக் கொண்ட லேவியின் பேரன். (2)
15. பெயர் சொல்லி அழைக்கப்பட்ட பெசலயேலுக்குத் துணையாக ஏற்படுத்தப்பட்டவனின் கோத்திரம். (2)
16. விநோத வேலைகளைச் செய்ய விஷேசமாய் அழைக்கப்பட்டவனின் கோத்திரம். (2)
18. கணவனின் உயிரைக் காப்பாற்ற உடன்படிக்கையின் அடையாளத்தை புத்திரனுக்குச் செய்த புத்திசாலியான புதுமைப் பெண். (5)





**தேவனது அதிசய மீட்பு தொடர்கிறது...**

வாக்குமாறா தேவன் மோசேயை எதிர்கொள்ளும்படி ஆரோனை அனுப்புகிறார். இருவரும் தம் மக்களை சந்தித்தனர். அவர்கள் பேசியபோது இஸ்ரவேலர் விசுவாசித்து தேவனை தொழுது கொள்ளுகின்றனர். அடுத்து அவ்விருவரும் பார்வோனை சந்தித்து பண்டிகை கொண்டாட என் ஜனங்களைப் போகவிட வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்கள். அதற்கு பார்வோன் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன் என்று பதிலளித்தான்.

தேவன் தாம் யார், தமது வல்லமை யாது என விளங்கச் செய்யும்படி பார்வோனின் பதில் இருந்ததால் எகிப்தியர் தொழுது கொள்ளும் பல்வேறு விக்ரகங்களை விட உயர்ந்தவர், உன்னதர், உண்மையுள்ளவர் என்று உணர்த்த பார்வோனது இருதயத்தைக் கடினப்படுத்தி மிகக் கொடுமையான பத்து வாதைகளை எகிப்தியர் யாவர் மீதும் அனுமதிக்கிறார்; எகிப்திய கடவுள்களுக்கு நியாயம் தீர்க்கிறார். எகிப்தியருக்கு எதிராக, **I will strike & I will smite** என்ற கர்த்தரின் வார்த்தை இவற்றை உறுதிப்படுகிறது.

பார்வோன் இஸ்ரவேலருக்கு ஆளோட்டிகள் மூலம் மேலும் நெருக்கடிகளும், அடிகளும் கொடுத்த போது இஸ்ரவேலர் எரிச்சலடைந்து மனங்கசந்து மோசேயிடம் முறுமுறுத்து கர்த்தர் உங்களை நியாயந் தீர்க்கக் கடவர் என்று சாபமிடுகின்றனர்.

**முதல் வாதை :** நைல் நதியின் நீர் இரத்தமாக மாறுதல் – இன்றும் 'நைல் எகிப்தின் நன்கொடை' என்று கருதப்படுகிறது. இந்நதியின் நீரை மோசே அடித்து இரத்தமாக்குகிறார். தெய்வமாக, புனிதமாக எண்ணப்பட்டு 'ஜீவனின் தந்தை' என்றும் 'தேவர்களின் தந்தை' என்றும் அழைத்து நரபலியும் கொடுக்கப்பட்ட அந்த நதியின் நீர் நாற்றமெடுத்து குடிப்பதற்கு தகுதியில்லாமல் போயிற்று.

**2-ம் வாதை :** தவளை – ஏழு நாளைக்குப்பின் சகோதரர்கள் பார்வோனை சந்தித்து எகிப்தியருக்கு ஒரு கடவுளாக தவளையின் தலையுடன் இருந்த, ப்தா என்றும் ஹேட் **(HERT)** என்றும் அழைக்கப்பட்ட தவளைகளை வாதையாக அனுப்ப அவை தேசம் முழுவதும் மூடியது. இக்கடவுள் ஸ்திரிகளின் பிள்ளைப் பேற்றின் போது உதவுகிறது என நம்பப்பட்டது. பார்வோன் இருவரையும் அழைப்பித்து தவளைகள் நீங்கும்படி கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்கிறான்.

**3-ம் வாதை :** பேன் – உருவில் மிகச்சிறிய பேன் தேவனுடைய ஆயுதமாக அனுப்பப்படுகிறது. இந்த பேன்கள் ஐ இஸ் **(ISIS)** என்ற உயிரின் தேவதை **(Godess of life)** என்று அழைக்கப்பட்டது.

**4-ம் வாதை :** வண்டுகள் – பலவித வண்டுகளை படைகளின் தேவன் அனுப்புகிறார். வண்டுகளினால் தேசம் கெட்டுப் போயிற்று.

**5-ம் வாதை :** கொள்ளை நோய் – பசு வடிவில் உள்ள தேவதையான இது ஹேதர் **(Hather)** என அழைக்கப்பட்டது. எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் இவ்வாதையால் அழிந்தன.

**6-ம் வாதை :** எரிபந்தமான கொப்பங்கள் – இது எகிப்தியரின் பெண் தெய்வம். மோசே கர்த்தர் சொன்னபடி சூளையின் சாம்பலை இறைத்த போது இவ்வாதை எழும்பி மனிதர் மற்றும் மிருக ஜீவன்கள் மேலும் தோன்றி வாதித்தது.

**7-ம் வாதை :** கல்மழை – உயிரின் தேவதை ஐசிஸ் எனப்பட்ட இத்தெய்வம் செழிப்புக்குக் காரணம் என கருதப்பட்டது. மோசே கோலை வானத்துக்கு நேராக நீட்டியபோது மனிதர், மிருகங்கள், வெளியில் இருந்த தாவரங்கள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்பட்டன.

**8-ம் வாதை :** வெட்டுக்கிளிகள்– இது பயிர்களை பாதுகாக்கும் சேத் என்ற எகிப்தியரின் தெய்வம். மோசே கோலை தேசத்தின் மேல் நீட்டியபோது கல்மழையினால் அழியாத பூமியின் பயிர்வகைகளெல்லாம் அழிந்தன.

**9-ம் வாதை :** காரிருள் – அம்மோன் – ரா என தெரிந்து கொள்ளப்பட்ட இது சூரியக் கடவுளாகும். இதனை வெட்கப்படுத்தும்படி தேவன் மூன்று நாட்கள் தடவிக் கொண்டிருக்கத்தக்க காரிருளை அனுமதித்தார்.


**10-ம் வாதை :** தலைப்பிள்ளை சாவு – இதனால் எகிப்தின் அரண்மனையிருந்த பார்வோனின் மகன் முதல் அடிமைகளின் தலைப்பிள்ளை வரை மாண்டு போவார்கள் என்று மோசே பார்வோனை எச்சரிக்கிறார். அவன் செவிசாய்க்காததால் சங்காரத் தூதன் மூலம் இது நிகழ்ந்தது. ஓசிரிஸ் என்ற எகிப்தியரின் வாழ்வுதரும் கடவுள் உண்மை தெய்வம் அல்ல என விளங்க இது நிறைவேறிற்று.

தேவன் அனுப்பிய இவ்வாதைகள் அனைத்தும் தேவன் யார் என வினவிய பார்வோனும், அவனது குடிகளும் கர்த்தரே உண்மை தெய்வம் என்று அறிந்து கொள்ளவும், அவர்கள் வணங்கும் தேவர்களின் மேல் நீதியைச் செலுத்தவும் அனுமதிக்கப்பட்டது. (யாத். 12:13)

மோசேயின் கோல் தேவனுடைய நீதியை செலுத்தும் கோலாக மாறியது. அக்கோல் பாம்பாக உருமாறிய போது எகிப்தின் மந்திரவாதிகளும், தங்கள் கோல்களை பாம்புகளாக்கினர். ஆனால் பாம்பாக மாறிய மோசேயின் கோல் அவற்றை விழுங்கியது. அசுத்த ஆவிகளுக்கும் சில வல்லமைகள் உண்டு. ஆனால் தேவனால் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் உன்னதமானதாகவும், பிற அடையாளங்களை அழிக்கக் கூடியதாகவும், முடிவானதாகவும் அமையும். பத்து வாதைகளில் ஒன்றையும் எகிப்து மந்திரவாதிகளால் அகற்ற முடியவில்லை என்ற உண்மையின் மூலம் மேற்கூறிய கூற்று உறுதிப்படுத்தப்படுகிறது.



# I. READ AND RECOGNISE : 41




Read and Recognise, வேதாகமப் புதிர்,
வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில்
அனைவரும் பங்கு பெறலாம். **25.08.2020**க்குள்
விடை அனுப்பப்பட வேண்டும்.
குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.

பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்லி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.

**97914 09192** **என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக மத்தியில் எழுதி Whatsapp மூலம் அனுப்பலாம்.**

## Guidelines :

a. Bible Portion : John 5 & 6 Chapters
b. All answers begin with the letter “T”
c. Letters can be used any number of times.
d. Give the reference.

**Questions :**

1. Do not marvel at ................, for an hour is coming when all who are in ................. .......... will hear his voice.
2. Jesus said ......... ............ in the synagogue, as he .......... at Capernaum.
3. ................, ............, I say to you, unless you eat flesh of ......... Son of Man and drink his blood, you have no life in you.
4. Where are we ................ buy bread, so ............. .............. people may eat?
5. .............. up your bed and walk.
6. Jesus said to ......... ........, “Do you want to go away as well?”
7. Afterward Jesus found him in ............ ...............
8. Jesus went away to the other side of ............. Sea of Galilee, which is ........... Sea of .................
9. This is why I .......... you ....... no one can come to me unless it is granted him by ............. Father.
10. I know .......... ............ ............ that he bears about me is ............

**Answers : I. Read and Recognise : 40** (John 3 & 4)

| | | |
|---|---|---|
| **1. Salim 3:23** | **4. speaks 3:31** | **7. Sir 4:19** |
| **2. serpent, so Son 3:14** | **5. Samaritans 4:39** | **8. Samaria, Sychar 4:5** |
| **3. seeking 4: 23** | **6. second 3:4** | **9. Spirit, spirit 3:6** |
| | | **10. spirit, spirit 4:24** |